செய்தி வெளியீடு எண்: 304 நாள்: 04.05.2018

# செய்தி வெளியீடு

திரைப்படத்துறையினர் நலவாரியத்தின் 5வது குழுக்கூட்டம் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்களின் தலைமையில் 04.05.2018 அன்று தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு நலவாரிய உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்ட பின்பு கூறியதாவது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்திரைப்படத் துறையினரின் நலன் கருதி பல்வேறு நலத் திட்டங்களை தீட்டி அவற்றை சிறப்பான முறையில் செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் திரைப்படத்துறையினர் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடியார்அவர்களின் தலைமையிலான இவ்வரசு திரைப்படத்துறையினர், சின்னத்திரையினர் ஆகியோர் மென்மேலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக திரைப்படத்துறையினர் நலவாரியம் மூலமாக தமிழ்நாடு அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்நாள் வரை திரைப்படத்துறையினர் நலவாரியம் மூலம் திரைப்படத்துறை, சின்னத்திரை, அவை சார்புடையதொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் உதவிடும் வகையில் திருமண உதவித்தொகை 169 நபர்களுக்கும்,கண் கண்ணாடி செலவுத்தொகை 167 நபர்களுக்கும்,மகப்பேறு உதவித்தொகை 11 தாய்மார்களுக்கும்,கல்வி உதவித்தொகை 1104 மாணவ/மாணவியருக்கும், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை 153 குடும்பங்களுக்கும் மற்றும் விபத்தினால் ஏற்பட்ட மரணத்திற்கான உதவித்தொகை ஒரு நபருக்கும் என மொத்தம் 1,605 பயனாளிகளுக்கு ரூ.48 லட்சத்து 78 ஆயிரத்து 750 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். மேலும் 2016 ஆம் ஆண்டில் உதவி வேண்டி வரபெற்ற மனுக்களின்படி 286 நபர்களுக்கு ரூ.7,11,750/– மற்றும் 2017ஆம் ஆண்டில் உதவி வேண்டி வரபெற்ற மனுக்களின்படி 163 நபர்களுக்கு ரூ.6,49,500/– மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் விரைவில் வழங்கப்படும் எனக் கூறினார்.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. **ஆர்.வெங்கடேசன், இ.ஆ.ப.**, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் மற்றும் உறுப்பினர்–செயலர்,முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப.,
அலுவல் சாரா உறுப்பினர்கள் திரைப்பட இயக்குநர் திரு. ஆர்வி. உதயகுமார், திரைப்பட இயக்குநர் திரு. பி.வாசு, திரைப்பட வசனகர்த்தா திரு.லியாகத் அலிகான்,திரைப்பட தயாரிப்பாளர் திரு.மோகன் காந்திராமன்,நடிகையும் திரைப்படப்பின்னணி பாடகியுமான திருமதி. டி.கே. கலா, மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**